எம்.சி.ஓபி.எண் : 3568,3569,3886/2023 தேதி: 11.08.2025

மசா : 4

பெயர் : Divakar

த/பெயர் : Dhanasekar

வயது : 47

<u>மனுதாரரின் தரப்பில் சாட்சி 1ன் முதல் விசாரணை</u>

நான் இந்த விபத்தில் நான் கண்ணுற்ற சாட்சி ஆவேன். எனது தரப்பில் பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நன்கு தெரிந்து கையொப்பம் இட்டேன். எனது தரப்பு சான்று ஆவணம் எனது ஓட்டுநர் உரிமம் மசா ஆ36 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு நீதிமன்றதிலிருந்து அழைப்பானை வரவில்லை. இந்த நீதிமன்றம் தவர வேற எந்த நீதிமன்றதில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. இறந்து போன நபரின் மனைவி அஷ்டலக்சுமி என்பவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி விபத்தானது 31.5.2023 மதியம் 2 மணியளவில் மேற்படி விபத்து நடந்தது. விபத்து சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இருந்தேன் என்பதற்கு ஆதரவு ஏதம் தாக்கல் செய்யவில்லை. மேற்படி விபத்ததை நான் சுமார் 15 மீட்டரில் பார்த்தேன். இந்த விபத்தானது கார் தான் வேகமாக சென்று இடித்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. கார் சுமார் 50 அல்லது 60 கிலோமீட்டர் வேகத்தில் தான ் சென்று கொண்டிருந்தது. மெதுவாக தான் போனது என்றால் சரிதான். இடித்ததாக கூறப்படும் வாகனமானது இன்டிகேடர் போடாமல் சாலையில் நிறுத்தி வைத்திருந்தார்கள். காரை ஓட்டி சென்ற நபர் மெதுவாக சென்றிருந்தால் இந்த விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் சத்தம் கேட்டு பார்த்தேனா என்றால் இல்லை நான் நேராக இடிப்பதை நான் நேரில் பார்த்தேன். மனுதாரர் கேட்டுக்

கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.